DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.6/2023**

**2025-ம் ஆண்டு மார்ச் திங்கள் 19- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.முத்துக்குமார் நகல் பரிசோதகர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | சென்ரிங் |
| பெயர் | - | சக்திவேல் | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | முத்துராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | பொள்ளாச்சி | வயது | - | 34/2025 |
| சாதி | - | | | | |

**<u>19-03-2025</u>**

## ( 1, 2 எதிரிகள் ஆஜர்)

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து செண்ரிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முத்துராஜ் எனது அப்பாவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் அய்யப்பன் மற்றும் செந்தில்பாலு ஆவார்கள். கடந்த 29-12-2022-ம் தேதி காலை 09.00 மணிக்கு ஆஜர் 1-ம் எதிரி அய்யப்பன் எனது தம்பி மணிகண்டனை செண்ரிங் வேலைக்காக பொள்ளாச்சி பழைய பஸ்ஸ்டாண்டிலிருந்து வால்பாறை அழைத்து சென்றார். மறுநாள் 30-12-2022-ம் தேதியன்றும் எனது தம்பி செண்ரிங்வேலைக்கு வந்தார். மதியம் 01.30 மணிக்கு எனக்கு அய்யப்பன் போன் செய்து எனது தம்பி கட்டிடத்திலிருந்து கீழே விழுந்துவிட்டதாக தெரிவித்தார். எனது தம்பியை சிகிச்சைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றுயிருப்பதாக கூறினார். நான் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு சென்று எனது தம்பியை பார்த்தேன். என் தம்பிக்கு பேச்சு மூச்சுயில்லாமல் இருந்தார். அவர்தலையில் அடிபட்டு இருப்பதாக தெரிவித்தார். காதில் ரத்தம் வழிந்துகொண்டிருந்தது. பின்னர் மேல்சிகிச்சைக்காக கோயம்புத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம். அவருக்கு ஸ்கேன் எடுத்து பார்த்ததில் முதுதண்டிலும், கழுத்து எலும்பிலும் முறிவு இருப்பதாக மருத்துவர் தெரிவித்தார். பின்னர் 3-ம் தேதி சிகிச்சை பலனிற்றி மருத்துவமனையிலேயே இறந்துவிட்டார். பின்னர் பிணக்கூராய்வின் போது ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

மணிகண்டன் என்பவர் கீழே விழுந்து அடிப்பட்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்த மணிகண்டன் எனது உடன்பிறந்த தம்பி என்றால் சரிதான். அவரது இறப்பிற்கு நஷ்டஈடு கேட்டு வழக்கு தொடர்த்துள்ளேன் என்றால் சரிதான். 30-12-2022-ம் தேதி எனது தம்பி வேலைக்குசென்றது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. அய்யப்பன் அவரை வேலைக்கு அழைத்துவந்தார். 30-12-2022-ம் தேதி மணிகண்டன் அய்யப்பனிடம் வேலைக்குசெல்லவில்லை என்றாலும், அய்யப்பன் மணிகண்டனுக்குதெரிந்தவர் என்பதால் அவரை பார்க்கசென்றபோது மணிகண்டனுக்கு வலிப்புவந்து கீழே விழுந்துவிட்டார் என்றுசொன்னால் சரியல்ல. எனது தம்பி மணிகண்டனுக்கு வலிப்பு நோய் கிடையாது. நான் எனது தம்பி மணிகண்டன்

இறப்பிற்கு நஷ்டஈடு கோரி வழக்கு தொடுத்துள்ளதால் நஷ்டஈடு பெறவேண்டி நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.6/2023**

**2025-ம் ஆண்டு மார்ச் திங்கள் 19- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.முத்துக்குமார் நகல் பரிசோதகர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | சலூான் |
| பெயர் | - | கண்ணன் | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | முத்துராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | பொள்ளாச்சி | வயது | - | 32/2025 |
| சாதி | - | | | | |

**<u>19-03-2025</u>**

**( 1, 2 எதிரிகள் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சலூான் கடையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முத்துராஜ் எனது அப்பாவார். ஆஜர் 1-ம் எதிரி அய்யப்பனை தெரியும். ஆஜர் 2-ம் எதிரியை தெரியாது. கடந்த 29-11-2023-ம் தேதி எனது அண்ணன் மணிகண்டன் வால்பாறைக்கு சென்ரிங் வேலைக்கு செல்வதாக கூறிவிட்டு சென்றார். பின்னர் 30ம் தேதி மதியம் 01-02 மணியளவில் 1-ம் எதிரி அய்யப்பனிடம் இருந்து போன் வந்தது. அவர் என்னிடம் உனது அண்ணன் வேலைசெய்யும் இடத்தில் கீழே விழுந்துவிட்டதாக எனது அப்பாவிடம் தெரிவித்தார். எனது அண்ணனுக்கு வால்பாறை அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சையளிக்கப்பட்டு பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்துசெல்லப்பட்டார். நான் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு சென்று எனது அண்ணனை பார்த்தபோது அவருக்குமுதுகு தண்டிலும் கழுத்து பின்புறத்திலும் அடிபட்டு இருப்பதாக தெரிவித்தார்கள். பின்னர் மேல்சிகிச்சைக்காக கோயம்புத்தூர் அரசு மருத்துவமனைக்கு எனது அண்ணனை அழைத்துசென்றனர். மூன்று நாட்கள் சிகிச்சைக்குபின்பு 3-ம் தேதி எனது அண்ணன் சிகிச்சை பலனிற்றி மருத்துவமனையிலேயே இறந்துவிட்டார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

29-ம் தேதி மணிகண்டன் எங்களது வீட்டிற்கு வந்துவிட்டாரா என்றால் இல்லை.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.6/2023**

**2025-ம் ஆண்டு மார்ச் திங்கள் 19- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 7-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.முத்துக்குமார் நகல் பரிசோதகர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 7 | தொழில் | - | மேசன்வேலை |
| பெயர் | - | கிரிதரன் | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | ஆறுமுகம் | சமயம் | - | |
| கிராமம் | - | பொள்ளாச்சி | வயது | - | 26/2025 |
| சாதி | - | | | | |

**<u>19-03-2025</u>**

**( 1, 2 எதிரிகள் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து மேசன் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முத்துராஜ் என்பவரை தெரியும். ஆஜர் 1-ம் எதிரி அய்யப்பன் என்பவரை தெரியும். அவர் மேஸ்திரிஆவார். ஆஜர் 2-ம் எதிரியை தெரியாது. சுமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பாக மாதம் நினைவில் இல்லை 29-ம் தேதி ஆஜர் 1-ம் தேதி வால்பாறையில் உள்ள லாட்ஜ் ஒன்றில் மேசன் வேலைக்காக அழைத்துசென்றார். ஒரு நபரும் சுற்றிப்பார்ப்பதற்காக வால்பாறை வந்தார். மொட்டை மாடியில் கம்பி கட்டிக்கொண்டிருந்தபோது சுற்றிப்பார்க்க வந்த நபருக்கு வலிப்பு ஏற்பட்டு கீழே விழுந்துவிட்டார். அவருக்கு அடிபட்டு இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

மேலிருந்து கீழே விழுந்த நபர் அய்யப்பனை தேடிவரும்போது அன்றைய தினம் சுமார் 11.30 மணி இருக்குமா என்றால் 11.45 மணி இருக்கும். அய்யப்பன் அங்கு இல்லாததால் அவர் வரும்வரை அவரை பார்த்துவிட்டு செல்வதற்காக அங்கு காத்துக்கொண்டு இருந்தார் என்றால் சரிதான். நாங்கள் வேலை செய்துகொண்டிருந்தபோது எங்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களாக மஞ்சள் நிற கெல்மெட் மற்றும் மஞ்சள் நிற லைனான் கயிறு 2-ம் எதிரி எங்களுக்கு கொடுத்தார் என்றால் சரிதான். நாங்கள் அந்த பாதுகாப்பு உபகரணங்களை அணிந்திருந்தோம். அந்த நபர் அணியவில்லை. அவர் வேலைக்கு வரவில்லை என்பதால்தான் பாதுகாப்பு உபகரணங்களை அணியவில்லை என்றால் சரிதான். வேலைக்கு காலை 08.00 மணிக்கு சென்றுவிடுவோம் என்றால் காலை 09.00 மணிக்குவேலை இடத்திற்கு வந்துவிடுவோம். மாடியிலிருந்து கீழே விழுந்த நபர் காலை 09.00 மணிக்கு வரவில்லை என்றாலும் காலை 11.45 மணிக்கு தான் வந்துள்ளார் என்றாலும் சரிதான். அய்யப்பன் வரும் வரை வெயிலில் காத்துக்கொண்டிருந்ததால்தான் வலிப்பு வந்து கீழே விழுந்துவிட்டார் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** :

கீழே விழுந்ததாக சொல்லப்படும் நபர் எங்களுடன் வேலைக்கு வந்தவரா என்றால் இல்லை. சுற்றிப்பார்க்க வந்தவர். அந்த நபர் எங்களுடன் வேலைக்கு வந்தவர் என்றாலும் கட்டிட வேலை செய்துகொண்டிருக்கும் போது அவர் கீழே விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிரிகள் இருவரும் எனக்கு அடிக்கடி வேலை கொடுப்பதால் அவர்களுக்கு ஆதரவாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.